



# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# JAFFNA HINDU COLLEGE

# இந்துவின் வீச்சு

இதழ் - 02

01.01.2020 தொடக்கம் 31.03.2020 வரை



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
சிவஞான வைரவர் ஆலயம்

**போசகர்:**

திரு.இரட்ணம் செந்தில்மாறன்
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பொறுப்பாசிரியர்கள்

திரு.சி.பரணீதரன்
(உப அதிபர்)

திரு.கு.மகிழ்ச்சிகரன்
(வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்)

வடிவமைப்பு
திருமதி.ச.மணிவண்ணன்

**வெளியீடு :- 21.12.2022**

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
021 222 2431
Principal@jhc.lk
www.facebook.com/
JaffnaHinducollegeoffcial

அதிபரின் உள்ளத்திலிருந்து…

யாழ் இந்துவின் வீச்சு இரண்டாவது இதழ் 2020 ஜனவரியிலிருந்து மார்ச் வரையான காலாண்டில் எமது கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் மாணவர்களின் சாதனைகள் என்பவற்றைத் தாங்கி வெளிவருகிறது. எமது கல்லூரியின் சமகாலப் பதிவுகளை உலகெங்கும் வாழும் எமது அன்பு யாழ் இந்துவின் புதல்வர்கள் மற்றும் யாழ் இந்து சமூகத்தினர் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் அனைவரும் பங்கேற்பதற்கும், எமது யாழ் இந்து உறவுகள் அனைவரையும் ஒருங்கிணைப்பதற்கும் இது உதவும் என்பதுடன் எமது நிகழ்வுகளின் வெளிப்படைத்தன்மையைப் பேணுதல் மற்றும் பொறுப்புக்களை உணர்த்தி நிற்பதில் யாழ் இந்துவின் வீச்சு பங்காற்றும் என நம்புகிறேன்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் மாணவர்கள் நீண்ட விடுமுறையில் நிற்பதால் அவர்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படவும் கற்றலில் தொடர்ச்சித் தன்மை அற்றுப் போவதும் அவதானிக்கப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் வண்ணம் சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் உயர்தரக் கற்கைகள் ஆரம்பமாகும் வரை அவர்களுக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வு நடாத்தத் தீர்மானிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இச் செயலமர்வுக்கு தலைசிறந்த துறைசார் வளவாளர்களாக எமது பழைய மாணவர்களும் செயற்பட்டிருந்தார்கள். இவ்விடயம் வீச்சு இரண்டில் முக்கியத்துவம் பெறுகிறது. தொடர்ந்து எமது சமூக வளர்ச்சிக்காக அனைவரையும் இந்தப் பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது

## திசைமுகப்படுத்தல் செயலமர்வு

◆ 2020.01.08ம் திகதி 2019 ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய 2022 உயர்தரப் பிரிவு புதுமுக மாணவர்களுக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வு சபாலிங்கம் அரங்கில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கல்லூரி பழைய மாணவனும் பொறியியலாளருமான சின்மயாமிசன் சுவாமிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆசியுரை வழங்கியிருந்தார், பிரதி அதிபர் திரு.அ.மி.கி.மகேந்திரன் அவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் விளக்கமளித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு.ஆ.நித்திலவர்மன் அவர்கள் மாணவர்களுக்கு 21ம் நூற்றாண்டின் கற்றல் திறன்கள், மென்திறன்கள் மற்றும் ஆளுமை வளர்ச்சி எனும் விடயங்கள் தொடர்பாக செயமலர்வினை ஆற்றியிருந்தார்,

வடக்கு மாகாண விவசாயத்துறை முன்னாள் அமைச்சரும் பழைய மாணவருமான சூழலியலாளர் திரு.பொ.ஐங்கரநேசன் அவர்கள் "இயற்கையோடு இசைவுறுவோம்" என்னும் தலைப்பில் தனது அனுபவப்பகிர்வினை மாணவர்களிற்கு முன்வைத்திருந்தார். இந் நிகழ்வில் கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர், பெற்றோர்கள், மாணவர்களாகியோர் கலந்துகொண்டிருந்தனர்.












◆ 14.01.2020 க.பொ.த உயர்தர 2022 புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு.

◆ 2020.01.09 ம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி.அபிராமி சிவரூபன் அவர்களும் விரிவுரையாளர் கஜவதனி கந்தசாமி அவர்களும் விலங்கியல்துறை சார்ந்த விளக்கவுரைகளை மாணவர்களிற்கு வழங்கியிருந்தனர்.





2020.01.13ம் திகதி மாணவர்கள் தொண்டைமனாறு பிரதேசத்திற்கு வெளிநாட்டு பறவைகளை அவதானிப்பதற்கான களப்பயணத்தை ஆசிரியர்களுடன் மேற்கொண்டிருந்தனர்.





◆ 2020.01.14 ம் திகதி யாழ் பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் திரு.சர்வேஸ்வரா அவர்கள் வளவாளராக கலந்து கொண்டு எதிர்கால திட்டமிடல்கள் தொடர்பாக மாணவர்களை வழிப்படுத்தியிருந்தார்.

மேலும் யாழ் மாநகர ஆணையாளர் திரு.த.ஜெயசீலன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவை பற்றியும் அவற்றிற்கு எவ்வாறு தேர்வாகலாம் என்பது பற்றியும் மாணவர்களினை வழிப்படுத்தியிருந்தார்.

◆ 2020.01.16 ம் திகதி யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி.ச.வசந்தப்பிரியன் (கணனி மற்றும் தகவல் முறைமைகள் துறை, சப்ரகமுக பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து கொண்டு பல்கலைக்கழக கற்கை நெறிகள் தொடர்பாகவும் அதற்கான உயர்தர பாடத் தெரிவுகள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கியிருந்தார்.





◆ 2020.01.17 ம் திகதி கல்லூரி ஆசிரியர்களான திரு.நா.விமலநாதன் (கணித,விஞ்ஞானதுறை) திரு.இ.ஸ்ரீரங்கநாதன் (கலைத்துறை), திரு.ச.சரவணபவன் (வணிகத்துறை) திரு.சி. ஜீவகநாதன் (கணித,விஞ்ஞானதுறை) ஆகியோரினால் மாணவர்களுக்கு பாடத்தெரிவுகள் பற்றியும் அத் துறைகளிலுள்ள சவால்கள், இடர்பாடுகள் பற்றியும் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியிருந்தனர்.

◆ 2020.01.20 ம் திகதி இயற்கை விவசாயம், நிலைபேறான உணவுத் தொகுதி தொடர்பாக தன்னுடைய அனுபவங்களை கல்லூரி பழைய மாணவரும் மருத்துவருமான வைத்திய கலாநிதி பிரபு அவர்கள் கலந்துரையாடினார்,

சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் இலக்கிய பரப்புக்களில் மாணவர்களின் ஆக்கங்கள் தொடர்பாக திரு.கிரிசாந் சிவசுப்ரமணியம் அவர்கள் தனது கருத்துக்களினை பகிர்ந்திருந்தார்.

◆ 2022.01.21, 22 ம் திகதிகளில் உளவள மருத்துவரும் கல்லூரியின் பழைய மாணவனுமான மருத்துவர்.திரு.ஜெகரூபன் (Medical Officer Mental Health (Focal Point), Regional Directorate of Health Services, Mullaithivu) அவர்கள் கலந்து கொண்டு "வாழ்க்கைக்கான தேர்ச்சிகள்' என்ற தலைப்பில் அமர்வினை முன்னெடுத்திருந்தார்.

◆ 2020.02.27 ம் திகதி "ஆரோக்கியமாக வாழ்தல்" எனும் தலைப்பில் விளக்கவுரைகள் நடாத்தப்பட்டது. வளவாளர்களாக வைத்தியர் கோ.றஜீவ் , வைத்தியர் செ ஜயக்குமாரன், திரு.ஜெயபாலன், திரு.கயேந்திரன் (அதிபர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

◆ 2020.02.10 ம் திகதி யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் மருத்துவருமான பேராசிரியர். மகேசன் நிர்மலன் MBBS, MD, FRCA, Phd, FFICM (Professor of Medical Education & Vice Dean for Social Responsibility and Public Engagement) அவர்கள் கலந்து கொண்டு "ஆளுமை விருத்தி மற்றும் சமூகம் பற்றிய பார்வையை நேர்மறையானதாக ஆக்கிகொள்ளல்" மற்றும் "சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல்" எனும் தலைப்புக்களில் மாணவர்களுக்கு செயல்நிலை விளக்கமளித்திருந்தார்.

## சாரணர் சிரமதானம்

◆ 07.01.2020 யாழ் இந்துக் கல்லூரியின் ஒரு பகுதி இன்று சாரணர்கள் மற்றும் மாணவர்களின் சிரமதானம் மூலம் அழகூட்டப்பட்டது.





## விளையாட்டு

### துடுப்பட்டம்

◆ 2020.01.14 ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரிக்கும் 13 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யுனியன் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 41 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதில் யாழ் இந்துக் கல்லூரி அணி சார்பில் விதுசன் 12 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைச் சரித்தார். சஞ்சை 3 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ரதுசன் 8 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி தமது 1ம் இனிங்சில் 166 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுபர்ணன் 34 ஓட்டங்களையும், ரதுசன் 29 ஓட்டங்களையும், விதுசன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யூனியன் கல்லூரி சார்பாக டிமெல்டென் 30 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றினார்.

2ம் இனிங்சில் யுனியன் கல்லூரி 52 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் டிமெலடன் அதிக பட்சமாக 19 ஓட்டங்களைப் பெற்றார். யாழ் இந்துக் கல்லூரி சார்பில் சுபர்ணன் 22 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைச் சரித்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி ஒரு இனிங்சாலும் 73 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.



- பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தினூடாக திரு.எஸ்.ஜெயபிரகாஸ் அவர்களினால் கரும்பலகை மற்றும் மடிக்கணணி என்பன பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



## துடுப்பாட்டம்

- 2020.02.12 ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் 13 வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 38.1 பந்துப் பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 87 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்றது.





## வருடாந்த தைப்பொங்கல் விழா

- 2020.01.15 ம் திகதி வருடாந்த தைப்பொங்கல் விழா ஞானவைரவர் கோயில் முன்றலில் வெகு விமரிசையாக நடைபெற்றது.









## Sri Lankan Biology Olympiad 2019

- 17.01.2020 A.Abbinanthan - Gold Medal, J.Kirushikan - Silver Medal, S.Tharsikan - Bronze





Medal

## திறன் வகுப்பறைகள் (Smart Classrooms)


- 2020.01.20 ம் திகதி உயர்தரத்தின் 5 வகுப்பறைகள் திறன் வகுப்பறைகளாக தரமுயர்த்தப்பட்டன. அமெரிக்க வாழ் விஞ்ஞானி திரு.சிவானந்தன் அவர்களால் 5 Smart boards அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது.





- 2020.01.21 ம் திகதி தரம் 11 இன் ஆறு வகுப்பறைகள் மகிழ்ச்சிகரமான திறன் வகுப்பறைகளாக மேம்படுத்தப்பட்டது. ஆரம்ப நிகழ்வில் பிரித்தானிய பழைய மாணவர் சங்க தலைவர் திரு.எஸ்.ஜெயபிரகாஸ் அவர்கள் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.











◆ 2020.02.20 ம் திகதி தரம் 6 B வகுப்பானது பெற்றோர்களின் பங்களிப்புடன் மகிழ்ச்சிகரமான திறன் வகுப்பறையாக மேம்படுத்தப்பட்டது.







◆ 2020.03.11 ம் திகதி தரம் 6A, 6C, 6D வகுப்புக்கள் பெற்றோர்களின் பங்களிப்புடன் மகிழ்ச்சிகரமான திறன் வகுப்பறைகளாக மேம்படுத்தப்பட்டன. பழைய மாணவர், பேராசிரியர் நு.அம்பிகைராஜா, பிரதித் துணைவேந்தர், நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா, அவர்களால் திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன.






## தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள் விழா – 2020

2020.01.27ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தரம் – 06 மாணவர்களுக்கான கால்கோள் விழா நிகழ்வானது ஞானவைரவப் பெருமான் ஆலய முன்றலில் நடைபெற்ற பூசையை தொடர்ந்து பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி முதல்வர் திரு.இ.செந்தில்மாறன் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் மாணவர்களுக்கான ஆசி உரையினை சின்மயாமிஷன் சுவாமிகள் சுவாமி சிதாகாசானந்தா அவர்களும் வாழ்த்துரையினை கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களும் வழங்கியிருந்தனர். தொடர்ந்து கல்லூரி முதல்வர் உரை இடம் பெற்றது. மாணவர் முதல்வர் உரையை தொடர்ந்து தரம் 6 மாணவர்களால் “மரம் நடுகை நிகழ்வு' இடம் பெற்றதுடன் பெற்றோர் சந்திப்பும் சபாலிங்கம் அரங்கில் இடம்பெற்றது.




















## CCTV ஒளிப்பதிவுக் கருவிகள்





## நூலக அபிவிருத்தி








◆ 2020.02.03 ம் திகதி சிறகுகள் அமையத்தினரால் ஒரு தொகுதி ஆங்கில நூல்கள் எமது கல்லூரி நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.







## பாடசாலை விடுதி

◆ 2020.03.02 ம் திகதி யாழ் இந்து மாணவர் விடுதி காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் திரு.மனோகணேசன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் மேற்படி மாணவர் விடுதித் திருத்த வேலைகள் இடம்பெற்றிருந்தது.









## விவாதச் சமர்

- 2020.02.08 ம் திகதி தமிழறிஞர் கலாநிதி க.சிவராமலிங்கம்பிள்ளை நினைவு விவாதச்சமரில் யாழ். இந்துக் கல்லூரி இவ்வாண்டும் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தால் பாடசாலை மாணவர்களிடையே இப்போட்டி நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பிரபல விவாத அணிகளைக் கொண்ட பாடசாலைகளுடன் கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, கொழும்பு பிரதேசப் பாடசாலைகளும் இணைந்து 22 அணிகள் போட்டியில் பங்கேற்றிருந்தன.





## சர்வதேசப் போட்டிகள்

- 2020.02.11 ம் திகதி உயிரியல் பிரிவு மாணவன் நித்தியானந்தன் மாதவன் சர்வதேச ரீதியில் நடாத்தப்பட்ட Google Code - In 2019 போட்டியில் Grand Prize Winner பட்டத்தை வென்றார்.

இவருக்கான கௌரவிப்பு விழா ஜூன் மாதம் கலிபோர்னியாவில் உள்ள Google தலைமையகத்தில் நடைபெற்றது.



## மெய்வல்லுநர் பயிற்சி

- 2020.02.19 ம் திகதி மெய்வல்லுநர் பயிற்சி ஆரம்பமும் பெற்றோர் சந்திப்பும் நடைபெற்றது. நிகழ்வுக்கு கல்லூரி முதல்வர், மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் திரு.க.விஜிதரன், கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன், வழிகாட்டல் ஆலோசனை அலகு மற்றும் மகிழகப் பொறுப்பாசிரியர் திரு கு.மகிழ்ச்சிகரன், உடற்கல்வி ஆசிரியர் திரு.ப.சதீஸ்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# AVIATION QUIZ

- 2020.02.27 Jaffna Hindu College has won the first runner up in THE AEROGENE'20 organized by Ananda College Colombo conducted today (27th) at Ananda College. This is an all island Aviation quiz conducted by the Aeronautical Society of Ananda College Colombo. Nalanda College won the 1st place. This is our school's first participation in an aviation quiz. Participated Students are S.Braveenan, N.Sivamynthan, T.Thinujan, P. Thanuraj, S.Branawan.







## பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி.

- 2020.02.29 ம் திகதி யாழ் இந்து ஆசிரியர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு Green Grass Hotel இல் நடைபெற்றது. ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம் இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது.

"கட்டிளமைப் பருவத்திலுள்ளவர்களுக்கு கல்வியை வழங்குவதில் ஆசிரியர் எதிர் கொள்ளும் சவால்கள் – ஓர் உள சமூகப் பார்வை" எனும் தலைப்பில் வைத்தியர் ஜெயரூபன் (JHC-91)அவர்களும் "ஏன்? எதற்கு? எப்படி?" எனும் தலைப்பில் திரு.மகேசன் தயாகரன் (ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்) (JHC-96) அவர்களும், "கற்றலுக்காக கற்றல்" எனும் தலைப்பில் பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் (யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம்) (JHC-89) அவர்களும் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.







## கருத்தரங்குகள்

- 2020.03.05 அன்று எமது பழைய மாணவர் பேராசிரியர் E.அம்பிகைராஜா, பிரதித் துணை வேந்தர், நியூ சவுத்வேல்ஸ் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியா அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.





## கல்விச்சுற்றுலா








## யாழ் இந்துவில் மகிழகம்

மாணவர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்தவும் அவர்களுள் மறைந்திருக்கும் திறன்களை கண்டறிந்து அவற்றுக்கு களம் அமைத்து கொடுக்கும் நோக்கோடு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விக்டோரியா கிளை அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் மகிழகம் அமைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் திறன் விருத்தி செயற்பாடுகளுடன், ஓய்வு நேரங்களில் வந்து விழிப்புணர்வுச் செயற்பாடுகள், உள மேம்பாட்டுக்கான விளையாட்டுக்கள், ஆகியவற்றை வினைத்திறனுடன் செயல்படுத்த உபகரணங்களும் பயிலரங்குகள் நடத்துவதற்குரிய வசதிகளும் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் பிரச்சினைகளையும் மனம் திறந்து உளவள ஆலோசகருடன் கலந்துரையாடும் வசதியும் கொண்டதாக மகிழகம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.







| No | Date | Doners details | Work | Place | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | 21.10.2019 | S.Jeyapiragash (A/L 1989-UK) , Agilan (A/1991-UK) | School Bus Engine repair | | 30,660.00 |
| 2 | 11.11.2019 | 1987 A/L Batch | Electric Work for class rooms (Fans,Lights and plugs) | For Grade 11,13, commerce block, | 903,014.00 |
| 3 | 1.202 | Grade 11 Parents (2020) | Painting,Carpentory Work | For Grade 11 Class rooms | |
| 4 | 28.01.2020 | S.Jeyapiragash (A/L 1989-UK) , Agilan (A/1991-UK) | School Bus Engine repair | | 15,487.00 |
| 5 | 22.01.2020 | S.Jeyapiragash (A/L 1989-UK) , Agilan (A/1991-UK) | School Bus painting | | 225,000.00 |
| 6 | 2020 | Grade 10 Parents (2020) | Painting,Sliding Window | Grade 10 | |
| 7 | 2020 | Grade 9 Parents (2020) | Tiling, | Grade 9 | |
| 8 | 2020 | Grade 8 Parents (2020) | Window, Celing, Floor work | Grade 8 | |
| 9 | 2020 | Grade 7 Parents (2020) | Wall Extention, Electric work | Grade 6 | |
| 10 | 2020 | Grade 6 Parents (2020) | Back side Notice board, Time table and Curriculam board | Grade 7 | |
| 11 | 2020 | Mr.Pirapu (Parent) | Painting | 13 E class rooms | |
| 12 | 2020 | Mr.Jegan (Parent) | Painting | 13 Bio Class room | |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது

| No | Date | Donors details | Donated things | No of Items | Amount | Donation Receipt No | Inventory folio No |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 03.02.2020 | Mr.Kirubakaran | A level English medium Books | 23 | | 4658 | Donation Book 02 Page 03 |
| 2 | 03.02.2020 | சிறகுகள் மையம் | General Knowledge Books, Story Books, Books relating to text | 117 | | 4659 | Donation Book 02 Page 03 |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது

| No | Date | Donors details | Donated Items | No of Items | Place | Amount | Dona-tion Re-ceipt No | Master Inven-tory | Inventory folio No |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 23.10.2019 | Mr.S.Jeyapiragash (A/L 89-UK) | Laptop | 1 | Admin Office | 75,000.00 | 4651 | Vol II P- 43 | Page 05 Book No 14 |
| 2 | 04.11.2019 | Dr.K. Suman (A/L 2002 Old boy) | Plants and pots | | School | 200,000.00 | 4652 | Not Inventor-ised | Not Inventor-ised |
| 3 | 26.11.2019 | Jaffna OBA | CCTV for school (1NVR,16 Cameras, 5Switches) | 16 cameras | School | 495,180.00 | 4844 | Fitting Regis-ter | |
| 5 | 31.11.2019 | Mr.S.Jeyapiragash (A/L 89 Old Boy - UK) | Carrom board | 1 | Carrom Room | 45,000.00 | 4654 | Vol I P 42 | Page 16 Book 03 |
| 6 | 30.11.2019 | Mr.Kalaiyalakan (A/L 86 Old Boy -UK) | 65" Smart panel and Web cam for chess room | 1 | Chess room | 395,000.00 | 4653 | V III P-24 | Page 44 Book 03 |
| 7 | 30.12.2019 | Prof.Sivananthan (USA) | 96" Smart Board | 5 | A/L Sci-ence Stream Classes | 1,337,500.00 | 4655 | Vol II P 27 | Page 69 Book 15 |
| 8 | 08.01.2020 | UK OBA | 96" Smart Board | 6 | Grade 11 | 1,605,000.00 | 4656 | Vol III P 27 | Page 63 Book 16 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 31.01.2020 | Grade 06 Parents (2020) | 96" Smart Board | 8 | Grade 07 Class rooms | 2,140,000.00 | 4657 | V II P 27 | Page 53 Book 16 |
| 10 | | | Water Filters | 4 | Grade 7 Class rooms | | | | |
| 11 | 03.02.2020 | Mr.Ragu (A/L 90 Old Boy - Uk) | Matress, Bed for Hostel and Plants for infront of Hostel | 30 | Hostel | 350,000.00 | 4841 | Vol II P 54 | Page 13 Book 10 |
| 12 | 20.02.2020 | District Secretary Jaffna | 96" Smart Board | 2 | Technology Stream&Science Stream | 524,000.00 | A/27 416921 | Vol II P 27 | Page 67 Book 15 |
| 13 | | | Labtop | 2 | Technology Stream & Admin | 188,292.00 | | Vol II P 42 | Page 67 Book 15 |
| 14 | 28.02.2020 | 6D Parents (2020) | Dell computer and UPS | 1 | 7D Class | 69,000.00 | 4661 | V I P- 61 & V III P -65 | Page 53 Book 15 |
| 15 | 28.02.2020 | 6A Parents (2020) | Dell computer and UPS | 1 | 7A Class | 69,000.00 | 4662 | V I P- 61 & V III P -65 | Page 53 Book 15 |
| 16 | 02.03.2020 | Grade 11 Parents (2020) | 3 CCTV For grade 11 class rooms | 2 | For 11 Class Block | 47,228.00 | 4845 | Fitting Register | |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 04.03.2020 | 6C parents (2020) | Dell computer and UPS | 1 | 7C Class | 69,000.00 | 4663 | V I P- 61 & V III P -66 | Page 53 Book 15 |
| 18 | 04.03.2020 | Mr.Kumaran (Grade 6 Parent (2020) | 96" Smart Board | 2 | | 535,000.00 | 4660 | Vol II P 27 | Page 69 Book 15 |
| 19 | 04.03.2020 | Dr.V.Sutharsan (A/L 94 Old Student) | 96" Smart Board | 1 | A level class | 267,500.00 | 4842 | Vol II P 27 | Page 69 Book 15 |

| No | Date | Name | Address | Amount | Purpose |
|---|---|---|---|---|---|
| 1 | 2019 | Prof Nirmalan | UK | Rs150,000.00 | Leader Magazine - Prefect Day |
| 2 | 29.02.2020 | UK OBA | | | Workshop for teachers in Green Grass Hotel |

| No | Date | Student name | Reason | Donor Name | Things | Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | | Hostel Students | Dinner for Hostel students at Thinnai Hotel | Mr.Kirupakaran (A/L 89 - UK) | | |
| 2 | | Hostrel Students | Lunch and chatty beach visit to Hostel Students | Mr.Mukunthan (A/L 89-Canada) | | |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21.12.2022ல் வெளியிடப்பட்டது